



சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்
மற்றும் வனத்துறை

# வனம்

மானியக் கோரிக்கை
எண்.54

# அறிவிப்புகள்
# 2023-2024

டாக்டர் மா. மதிவேந்தன்
வனத்துறை அமைச்சர்

50 YEARS
PROJECT TIGER

# வனத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வனத்துறையின் சார்பில் 7 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**டாக்டர் மா. மதிவேந்தன்**

**வனத்துறை அமைச்சர்**

**1. திண்டுக்கல் வனக்கோட்டம் அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

அழிவின் விளிம்பில் உள்ள அரிய வகை "தேவாங்கு" இனம் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய வனப்பகுதியில் வாழ்கின்றன. இவை கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் சில பகுதிகளில் பரவியுள்ளன.

தமிழ்நாடு அரசு, இந்தியாவின் முதல் "தேவாங்கு" வனஉயிரின சரணாலயத்தை திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் 11,806.56 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏற்கெனவே அறிவித்துள்ளது. இது தேவாங்கு இனத்தின்

பாதுகாப்பு மற்றும் அறிவியல் ஆய்வுகளுக்கு உதவியாக இருக்கும்.

அழிவின் விளிம்பில் உள்ள இந்த தேவாங்கு இனத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த திண்டுக்கல் மாவட்டம், அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம் ஒன்று 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

---------

**Slender Loris Conservation Centre will be set up at Ayyalur in Dindigul Forest Division at a total cost of Rs.20.00 crore**

**காடு செழித்தால், நாடு செழிக்கும் !**

## 2. தஞ்சாவூர் மாவட்டம் மனோராவில் கடற்பசு பாதுகாப்பு மையம் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

அரிய வகை கடல் உயிரினம் மற்றும் கடலின் மிகப்பெரிய தாவர உண்ணியான கடற்பசுக்களை பாதுகாக்கவும், அவற்றின் வாழிடத்தை மேம்படுத்தவும், இந்தியாவின் முதல் கடற்பசு (Dugong) பாதுகாப்பகம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்த கடற்பசு பாதுகாப்பகம் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய 448 சதுர கிலோ மீட்டர் கடற்பரப்பை கொண்டுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக, சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம் தஞ்சாவூர் மாவட்டம்

மனோராவில் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இது அப்பகுதியில் கடற்பசுக்களின் பாதுகாப்பு மற்றும் சூழல் சுற்றுலாவை மேம்படுத்துவதாக அமையும்.

---

**'International Dugong Conservation Centre' will be established at Manora in Thanjavur Forest Division at a cost of Rs.15.00 Crore.**

**மரம் வளர்ப்போம், மழை பெறுவோம் !**

**3. பள்ளிக்கரணை பாதுகாப்பு மையம் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டின் இயற்கையான ஈரநிலங்களில் பள்ளிக்கரணை சதுப்பு நிலமும் ஒன்றாகும். இந்த ஈரநிலம் நீர்வாழ்வன, ஊர்வன, வண்ணத்துப் பூச்சிகள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றிற்கு வாழ்விடமாக அமைந்துள்ளது. தற்போது பள்ளிக்கரணை சதுப்பு நிலம் பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக ராம்சார் மாநாட்டின் படி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஈரநிலத்தைப் பாதுகாப்பது சென்னை நகருக்கு மிக முக்கியமானதாகும். இந்த சதுப்பு நிலத்தை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவது மிக அவசியமானதாகும்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் மதிப்பை பாதுகாக்கவும் மற்றும் சூழல் சேவைகளுக்காகவும், பள்ளிக்கரணை பாதுகாப்பு மையம் 20.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இம்மையம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், சுற்றுலா பயணிகள், பறவை காப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி தொடர்பான தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்கும்.

-----------

**Pallikaranai Conservation Centre will be established at a cost of Rs.20.00 crore.**

**நெகிழியைத் தவிர்ப்போம், வனங்களை மீட்போம் !**

**4. ராம்சார் தளம் - வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 9.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் இந்தியாவிலேயே பழமையான பறவைகள் சரணாலயங்களில் ஒன்றாகும். புலம்பெயரும் காலங்களில் இந்த வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சுமார் 30,000 முதல் 40,000 வரை பறவைகள் காணப்படும்.

இந்த பறவைகள் சரணாலயத்தின் முக்கியத்துவம் காரணமாக, வேடந்தாங்கல் ஏரியில் சூழல் மறுசீரமைப்பு பணிகள், சூழல் சுற்றுலா

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் மற்றும் வேடந்தாங்கல் கிராமத்தைச் சுற்றியுள்ள கிராம மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்குவது போன்ற ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 9.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

---

**Integrated development of Vedanthangal Birds Sanctuary – a RAMSAR site will be done at a total cost of Rs.9.30 Crore.**

**பறவைகள் சிறந்தால், மனிதனும் சிறக்கலாம்!**

**5. ராம்சார் தளம் - கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகாவில் உள்ள கூந்தன்குளம் கிராமத்தில் 129.33 ஹெக்டேர் பரப்பளவில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. இது 2022-ல் ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சரணாலயம் கூந்தன்குளம் மற்றும் காடன்குளம் ஆகிய 2 குளங்களைக் கொண்டுள்ளது. கூந்தன்குளம் புலம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் நீர்ப்பறவைகளின் மிகப்பெரிய இனப்பெருக்க ஈரநிலப் பகுதியாகும்.

கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தில் பாதுகாப்பு மற்றும் சூழல் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல் போன்ற ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூழல் மறுசீரமைப்பு மற்றும் சூழல் சுற்றுலாப் பணிகள் மூலமாக மேற்கொள்ளப்படும்.

-----

**Integrated Development of Koonthankulam Birds Sanctuary - a RAMSAR site will be done at a cost of Rs.6.00 Crore.**

**யானைகள் வாழ்ந்தால், காடுகளும் வாழும் !**

**6. பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 3.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

பழவேற்காடு பறவைகள் சரணாலயம் அடர் உப்புநீரை கொண்ட இரண்டாவது பெரிய ஏரி ஆகும். இந்த ஏரி தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இந்த பழவேற்காடு ஏரியின் பரப்பளவு சுமார் 15,367 ஹெக்டேர் ஆகும். இந்த ஏரி சுமார் 52 கிராமங்களில் வசிக்கும் பெரும்பகுதி மக்களுக்கு மீன்பிடி தொழில் மூலம் முதன்மை வாழ்வாதாரமாக இருந்து வருகிறது.

இந்த பகுதியின் சுற்றுலாத் திறனை மேம்படுத்துதல் மற்றும் இப்பகுதியைச் சுற்றியுள்ள

உள்ளூர் மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல் போன்ற ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 3.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

---

**Integrated development of Pulicat Bird Sanctuary will be done at a total cost of Rs.3.70 Crore.**

**புலி உள்ள காடே, வளமான காடு !**

**7. அரியலூர் கரைவெட்டி பறவைகள் சரணாலயம் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

கரைவெட்டி பறவைகள் சரணாலயம் 453.715 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழ்நாட்டின் மிகப்பெரிய சதுப்பு நிலமாகும். இந்த சரணாலயம் உள்ளூர் மற்றும் புலம்பெயர் பறவைகளை பெரிதும் ஈர்க்கிறது.

இது 82 நீர்ப்பறவைகள் உட்பட 203 பறவை இனங்கள் கொண்ட மாநிலத்தின் பெரிய சரணாலயம் ஆகும். இச்சரணாலயத்தில் டிசம்பர் முதல் பிப்ரவரி வரை 80-க்கும் மேற்பட்ட நீர்ப்பறவை இனங்கள் வந்து செல்கின்றன. இங்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் பறவைகள் உணவிற்காகவும், இனப் பெருக்கத்திற்காகவும் வருகின்றன. மக்கள்

இச்சரணாலயத்திற்கு வந்து பறவைகளை காண சிறந்த காலம் நவம்பர் முதல் டிசம்பர் வரை ஆகும்.

பறவைகளின் பாதுகாப்பை உயர்த்துவதற்காகவும், பார்வையாளர்கள் சிறந்த சூழல் சுற்றுலா அனுபவத்தைப் பெறுவதற்காகவும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள இந்த கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

----------

**Integrated Development of Karaivetti Birds sanctuary at Ariyalur will be done at a cost of Rs.1.00 Crore.**

**நீர்நிலைகள் காப்போம், பல்லுயிர்ப் பெருக்குவோம் !**

**டாக்டர் மா. மதிவேந்தன்**

**வனத்துறை அமைச்சர்**

மரத்தை நாம் வளர்த்தால்..

மரம் நம்மை வளர்க்கும்..!

–டாக்டர் கலைஞர்